IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO.12/2019

P.W.2-KUMARAVELU

DATE:05.04.2021

**குறுக்கு விசாரணை.**

**எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிப்பதற்கு சம்மன் வரவில்லை. வாதி நேதாஜி இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. நேதாஜியின் தகப்பனார் இன்று நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறார் என்றால் சரிதான். என்னை இன்று நீதிமன்றத்திற்கு நேதாஜி தான் வரச்சொன்னார். இந்த வழக்கிடை விவரங்களை நேதாஜி என்னிடம் சொன்னார். நான் இந்த நீதிமன்றத்தில் முதல் விசாரணை வாக்குமூலம் கொடுத்திருக்கிறேன். நான் காதி போர்டில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். அதன்பிறகு சும்மாதான் இருக்கிறேன் என்றால் சரிதான். நான் 2016ல் ஓய்வு பெற்றேன். தற்போது நடைபெற்றுவரும் வழக்கின் உடைய சர்வே எண், டோர் நம்பர் தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது. டெல்லிபாயை எனக்கு தெரியும். டெல்லிபாய் என்பவர் நடமாடக்கூடிய நிலையில் எவ்வளவு நாட்களாக இல்லை என்றால் அவர் நடமாடுகிறார். என்னுடைய சொந்த ஊர் லத்தேரி. முதல் பிரதிவாதி பிரபாவதி எனக்கு பக்கத்து கிராமம் தான். செஞ்சிகிருஷ்ணாபுரம். பக்தவச்சலத்தை எனக்கு 40 வருடங்களாக தெரியும். அவர் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் என்றால் சரிதான். டெல்லிபாய் லத்தேரிக்கு போய்விட்டு வரும்போது என்னிடம் பேசிவிட்டு தான் செல்வார்களா என்றால் பார்த்தால் பேசுவார்கள். அவர் எப்போது என்னை பார்த்தார், அவர் எப்போது என்னிடம் பேசினார் என்ற விவரம் என்னால் சொல்லமுடியாது என்றால் தேதி எல்லாம் சொல்ல முடியாது. பக்தவச்சலத்திற்கும் எனக்கும் நீண்ட நாட்கள் கொடுக்கல் வாங்கல் உள்ளது அவர் எனக்கு நண்பர் என்று சொன்னால் பணம் கொடுக்கல் வாங்கல் எதுவும் கிடையாது. என்னிடம் டெல்லிபாய் வரவும் இல்லை, நான் அவரை பார்த்ததும் கிடையாது, நான் வழக்கிற்காக**

பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் கூறியுள்ள விவரங்கள் எல்லாம் உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல.